Sea Street, Colombo - 11.
Dial: 075-337346, 2332634

With Compliments from:-

*The Boys*

Ragan  Deva
Rajeevu  Deepan
Patrick





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாதமன்ற உறுப்பினர்கள்

தலைவர்

செல்வி. க. தேன்மொழி

உபதலைவர்

செல்வி. பா. கிருத்திகா

உறுப்பினர்கள்

செல்வி. ரா. அபிராமி
செல்வி. ப. ஆஷாபானு
செல்வி. சியாளினி
செல்வி. ஜோ. ஜோர்ஜினி
செல்வி. சி. பெனிட்டா
செல்வி. த. லூஷாந்தினி
செல்வி. நா. விஜயலக்ஷ்மி
செல்வி. ஜி. பேர்னி
செல்வி. ஜோ. ஷ்யசின்

## தமிழ் நாடக மன்ற உறுப்பினர்கள்

தலைவர்

செல்வி. ஜோ. ஜேர்ஜினி

உபதலைவர்

செல்வி. சா. டிரோஷினி

உறுப்பினர்கள்

செல்வி. நா. ரஞ்சினி
செல்வி. நி. பவித்ரா
செல்வி. பா. ஜெனிட்டா
செல்வி. சி. இசபெல்லா
செல்வி. சி. கிருஷ்ணவேணி
செல்வி. ஆ. பிரியா
செல்வி. இ. அமுதினி
செல்வி. ப. கிர்ஷாந்தி
செல்வி. மீ. பந்நீசியா
செல்வி. ஜ. மொரின் சிந்துஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

# Computer Classes
## At Wattala Junction

- Diploma in Ms Office 97/2000
- Diploma in Desk Top Publishing
- Hadware Engineering
- Diploma in Computer programming
- Single Subjects
- Kids


Medium: English, Tamil & Sinhala Languages
E-mail Type Setting & Scanning Services Available
All payments by installments



**Computer Studies & Training Centre**
**No : 88 Hekitta Road, Wattala.**
**Tel : 075 - 349247**
**E -mail : dscom @ mail . Visual. Lk**

With Compliments from:-

# TANIA'S FOTO
## Studio & Colour Lab



No. 41, K.B.Christy perera Mawatha,
Colombo -13.
Tel: 074 615917
Fax: 074 615918


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழுக்கான ஆலோசனைகள்

தன்னலம் தவிர்த்து, பிறர் நலம் பேணும் பொது நல வாழ்வே புகழின் களமாய் அமைந்துள்ளது. ஒருவருக்கு உரிமையானதொன்று மற்றவர்களுக்கும் பயனுடையதாய் அமையுமானால் அப்பொழுது மற்றவர்கள் அவரை உயர்வாகவும் புகழ்ந்தும் பேசுகின்றனர். ஒருவரால் மற்றவர்கள் நன்மை அடையும் பொழுது மற்றவர்கள் அவருக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளார். அந் நன்றிக் கடன் காரணமாக அவர்கள் அவரை மிகவும் மகிழ்வுடன் புகழ்ந்து வாழ்த்துகின்றனர். அதுவே புகழின் பிறப்பிடம்

புகழுக்குரியவர்கள் இயல்பாகவே அடக்கம் உள்ளவர்களாய் இருப்பார்கள் "நான் புரிந்த சாதனை", "என்னால் உருவாக்கப்பட்டது", "என்னை தவிர எவராலும் செய்திருக்க முடியாது" என்று அகந்தையாகக் கூறக்கூடாது. சாதனை படைத்த நிலை பெருமைக்குரிய நிலையாகும். அப்பெருமைக்குரிய நிலையில் பணிவும் அடக்கமும் நிறைந்திருக்க வேண்டும்.

காயும் கனியும் நிறைந்துள்ள மரக்கிளை தாள் தாழ்ந்து காணப்படும். தாழ்ந்து கிணற்றுக்குள் இறங்கும் வாளிதாள் தண்ணீரை முகந்து மேலேறும். வாழ்வின் வெற்றி நிலையில் சாதனை புரிந்த நிலையில் - அகந்தை உணர்வினை நெருங்க விடாது. அடக்கத்தை ஓர் அணிகலனாகக் கொண்டொழுகுதல் வேண்டும்.

புகழ் பெற்றோர் அடக்கமின்றி அகந்தை கொள்வாராயின், சமுதாயத்தினால் தாழ்த்தப்படுவர்.

எல். மடோனா
**2005 A/L Arts**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

J.B.R.Coonghe

JRS

# J.Remitta Stores

## DRY FISH MERCHANTS

OFFICE :
P- 255. Keyzer Street,
Colombo - 11.SRI LANKA
Tel: 344287
Fax: 345361

BRANCH :
218,Bankshall Street,
Colombo - 11.SRI LANKA
Tel: 344287
Resi: 448391

**E-mail : remittas@webstation.lk**

With Compliments from:-

*C.Sanmukasundram*

# Sampoorna Caterers

*Pure Vegetarian Lunch, party Orders, Sweets.*

*Outdoor Catering Etx.*



34, A.G.Hinniappuhamy Mw,
Colombo - 13.

Tel: 434053
074 - 613015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

ஒரு வீட்டில் பல கோழிகளும் ஒரு நாயும் வளர்த்து வந்தன. கோழிகளுள் சாம்பலும் கறுப்பும் நிறம் உடைய கோழி ஒன்று மட்டும் அந்த நாயான ஸ்நோவியுடன் நட்புக் கொண்டிருந்தது. இவர்கள் இருவரும் எந்நேரமும் ஒன்றாகவே சாப்பிடுவார்கள். சுற்றித் திரிவார்கள். இவர்களது நட்பினை மனிதர்கள் பார்த்து வியந்து கொண்டிருந்தனர். இவ்வாறு இருக்க ஒரு நாள் கோழி இட்ட முட்டையைக் காணவில்லை. அது துன்பத்தால் கண்ணீர் விட்டு அழுதது. உடனே தன் நண்பனான ஸ்னோவியைத் தேடி ஓடியது. ஆனால் அங்கே ஸ்னோவியைக் காணவில்லை. ஸ்கோவியின் கூட்டுக்குள் கோழியின் முட்டை மட்டுமே இருந்தது. இதைக் கண்ட கோழி கோபத்தால் கொக்கரித்து நாயைத் தேடி ஓடியது. தாய் மேல் கொண்ட கோபத்தால் அவன் ஒரு துரோகி எனப்பலவாறு திட்டியது. எப்பொழுது எதிரே ஸ்நோவி வந்து கொண்டிருந்தது. வந்தவுடன் கோழியைப் பார்த்து "நண்பியே முட்டையை இட்டுவிட்டு எங்கே போனாய்? நீ இல்லாத வேளை பாம்பு ஒன்று வந்த உன் முட்டையை குடிக்கப் பார்த்தது. நான் உடனே குரைத்துப் பாம்பை துரத்தி விட்டு முட்டையை பத்திரமாகக் கொண்ட வந்து என் கூட்டில் வைத்த இருக்கிறேன்" என்றது. கோழிக்கு என்ன செய்வத என்று தெரியவில்லை. கடவுளே என் நண்பனை நான் திருடன் என் நினைத்து விட்டேனே என்னை மன்னித்துக் கொள் என மனதுக்குள் வேண்டிக் கொண்டு ஸ்நோவியைப் பார்த்து" உன்னை தவறாக நினைத்ததற்கு என்னை மன்னிப்பாயா?" என்று கேட்டுக் கண்ணீர் விட்டது. அதற்கு நாயோ பெரிய மனதுடன் "இவ்வாறெல்லாம் மன்னிப்புக் கேட்க வேண்டாம். நட்புக்குள் ஒருநாளும் கோபம், சந்தேகம் இருக்க கூடாது. அதை உணர்ந்து விட்டாலே போதும்" எனக் கூறி கோழியை அன்புடன் அணைத்துக் கொண்டது.

தாட்ஷாயணி ரவிவர்மா
தரம் 6A

# சிறுவர் உரிமைகள்

சர்வ தேச ரீதியில் சிறுவர்களின் நலன்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்து இன்று இன்று அதிக கவனம் செலுத்தப்படுகிறது. சிறுவர்களின் உரிமைகள் சரியாக நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் ஐக்கிய நாடுகள் சபை அதிக ஆர்வம் காட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது.

3ம் உலக நாடுகள் பலவற்றில் சிறுவர் உரிமைகள் மீறப்படுவதாக பொதுவான குற்றச்சாட்டுக்கள் இருந்து வருகின்றன. இலங்கையைப் பொறுத்த மட்டில் சிறுவர் பராமரிப்பு மற்றும் அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் இலங்கை நீண்டதோர் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. நாட்டின் வழமையான சட்டதிட்டங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பன இதற்கு துணை புரிகின்றன. எனவே இலங்கைச் சிறார்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவு சட்டப்பாதுகாப்பு இருந்த வருகிறது என்பதை உணர முடிகின்றது. மேலும் சிறுவர் உரிமைகள் மேலும் உத்தரவாதப்படுத்தப்படுகிறது.

இலங்கையில் வாழும் சிறார்கள் வளர்ந்தோரைப் போன்று அரசியல் யாப்பின் கீழ் குறிப்பிட்ட சில உரிமைகளை பெற்றுள்ளனர். பேச்சு சுதந்திரம், கருத்து தெரிவிக்கும் சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடும் சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரம், பொது இடங்களிலும் தனிமையிலும் தமது மதத்தை அனுசரிக்கும் சுந்திரம், தமது கலாச்சாரத்தைப் பின்பற்றும் சுதந்திரம் மற்றும் தமது சொந்த மொழியை உபயோகிக்கும் சுதந்திரம் என்பனவாகும்.

இலங்கையில் சிறுவர்களுக்கு இலவசக்கல்வி, மருத்துவம் என்பன கிடைக்கின்றன. கல்விக்காக அரசு பெருந்தொகைப் பணத்தை வருடாந்தம் செலவிடுகிறது. ஆரோக்கியத்தைப் பெறுத்த மட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

# Well Wisher


 

**Lion Brian Walter**
**District Chairman For Leos**

With Compliments from:-

# Leo S. Pragalathan

**District President**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சேய் மரணங்கள் அதிகரித்துள்ள போதிலும் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. தேசிய ரீதியிலான பால்தடுப்பு நடவடிக்கைகள் மூலம் இளம்பிள்ளை வாதம், சின்னம்மை, போன்ற நோய்கள் ஒழிக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் வன்முறைகள் காரணமாக தாய் தந்தையர் மற்றும் உற்றார் உறவினர்களை இழந்து பல சிறார்கள் அநாதைகளாகியுள்ளனர். இவர்களைப் பராமரிக்கும் பாரிய பணி அரசாங்கத்தின் மீது சார்ந்துள்ளது.

இதே வேளை சிறுவர்களை வேலைக்கமர்த்தல் மற்றும் பாலியல் ரீதியான வன்மறைகளுக்குள்ளாக்குதல் போன்ற பிரச்சனைகளுக்கும் இலங்கை சிறார்கள் முகம் கொடுத்து வருகின்றனர். நாட்டில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை சுமார் ஆறு லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. வறுமையே இதற்கான அடிப்படை காரணமாகும். எட்டுவயதுக்குட்பட்ட சீறுவர்கள் குற்றமிழைக்கும் பட்சத்தில் அவர்கள் அதற்கு பொறுப்புடையவர்கள் அல்ல எனக் குற்றவியல் கோவை விதந்துரைகின்றது. எனினும் 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் தாம் புரியும் குற்றத்திற்கு பொறுப்புடையவர்களாவார்கள்.

எனவே எமது நாட்டில் எதிர்கால சந்ததியினரை பாதுகாப்பது எமது கையில் தான் உள்ளது.

வே. அஸ்வினி
**13**ம் தரம் தரம் வர்த்தகப்பரிவு

## அன்பு

"அன்புதான் இன்ப ஊற்று அன்பு தான் உலக மகாசக்தி அன்பு தான் உலக ஜாதி" என்று கூறுவார். ஆம், இந்த உலகில் பிறந்தவர்கள் வாழும் குறுகிய காலத்தினுள் எல்லோரிடத்தில் அன்பு காட்டி, அன்பாக நடந்து அவர்களது அன்பையும் பெற்று பேரானந்தம் அடையாளம். மனிதரானாலும் சரி, மிருகங்கள், பறவைகள், உயிரினங்களானாலும் சரி நாம் எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அன்பிற்குக் கட்டுப்படாத உயிர்களே இல்லை. அன்பினால் நாம் இவ்வுலகில் எதனையும் சாதித்து விட முடியும். வன்பினால், கோபத்தினால், விரோதத்தையும் பகைமையையும் மட்டுமே வளர்த்துக் கொள்வோம். அன்புடன் மற்றவர்களுடன் பழகும் போது அது இன்னும் அதிகரித்து அது நன்மையையே செய்யும் .இதனாலேயே தான் "அன்பே சிவம்" என்பர். எந்தமதம் ஆனாலும் சரி, எந்த இனமானாலும் சரி மனிதர்களே தான். அன்போடு அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். மிருகங்கள், பறவைகள் மற்றும் உயிரினங்களும் கூட நாம் அன்பு செய்யும் போது எம்மோடு கனிவாக பழகுகின்றன. ஐந்தறிவு ஜீவனே இவ்வாறு செய்யுமாயின் படைத்த மனிதர்கள் எவ்வளவு தூரம் அன்புக்கு கட்டுப்படுவார்கள். வீண் சண்டைகளும், போர்களும் அழிவுகளும் மனித நேயம் அற்று போவதனாலேயே ஏற்படுகின்றன. மனிதர்கள் ஒவரை ஒருவர் புரிந்து கொண்ட அன்பாக நடக்கும் போது இவ்வாறு வீண் அனார்த்தங்களுக்கு இடமேயில்லை. அன்பு அள்ள அள்ள குறையாது. மற்றவர்களுக்கு கொடுக்க கொடுக்கக் கூடுதலான வளரும், பெருகும். நமக்கு நன்மையையும், மகிழ்வையும் கொண்ட வருவது அன்பு ஆகும். சாந்தியும் சமாதானமும் தானாகவே தேடி வரும். இவ்வளவு நன்மைகளை செய்யும் அன்பை அன்பு செய்ய நாம் பின் நிற்கலாமா? அன்பினை யாராலும் அடைக்கவோ, தாக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியும். இத்தகைய அன்பினை யாராலும் அடைக்கவோ, தாக்கவோ நாமும் மகிழ்வாக இருந்து மற்றவர்களையும் மகிழ்வாக வைத்து அன்பு நிறைந்த அமைதியான நிலைக்கு அபைபோமாக.

ர. ரமியா
தரம் 6A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

A. Lasanth Fernando

# L & L Enterprises

*OFFICE:*
*No. 24, Old Street,*
*Colombo -11.*
*Tel: 421615*
*Fax: 342644*

*RESIDENCE:*
*No. 15, Wasala Road,*
*Colombo -13.*
*Tel: 421615*
*Fax: 342644*

With Compliments from:-

A. V. M

**MEMO**

# MARY STORES

DRY FISH MERCHANTS & COMMISSION AGENTS

214, Bankshall Street,
Colombo - 11

**Phone: 438610 320769** **Date........................**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினெண் கீழ்க் கணக்கு நூல்களும் அவற்றை ஆக்கியோரும்

| | | |
|---|---|---|
| நாலடியார் | ~ | சமண முனிவர்கள் |
| நான்மணிக்கடிகை | ~ | விளம்பி நாகனார் |
| இனியவை நாற்பது | ~ | கபிலர் |
| இனியவை நாற்பது | ~ | பூதஞ் சேந்தனார் |
| திரிகடுகம் | ~ | நல்லாதனார் |
| ஆசாரக் கோவை | ~ | பெருவாயின் முள்ளியார் |
| பழமொழி நானூறு | ~ | முன்றுரையனார் |
| சிறு பஞ்ச மூலம் | ~ | மாக்காரியாசன் |
| முதுமொழி காஞ்சி | ~ | மதுரைக் கண்ணாற் கூத்தனார் |
| ஏலாதி | ~ | மாக்காயனார் மாணாக்கர் கனி மேதாவியார் |
| கார் நாற்பது | ~ | மதுரைக் கூடலூர் கிழார் |
| ஐந்திணை ஐம்பது | ~ | மாறன் பொறையனார் |
| திணைமொழி ஐம்பது | ~ | சாத்தையார் மகனார் கண்ணம் பூதனார் |
| திணைமாலை நூற்றைம்பது | ~ | மாக்காயனார் மாணாக்கர் கனி மேதவியார் |
| கைந்நிலை | ~ | முள்ளிநாட்டு நல்லூர் காவிதியார் மகனார் புல்லாங்காடனார். |
| களவழி நாற்பது | ~ | பொய்கையார். |

| | | |
|---|---|---|
| எட்டுத் தொகை:~ | நற்றிணை | குறுந்தொகை |
| | ஐங்குறுநூறு | கலித் தொகை |
| | பதிநூற்றுப்பத்து | அகநானூறு |
| | பரிபாடல் | புறநானூறு |
| ஐம்பெருங்காப்பியம்:~ | சீவக சிந்தாமணி | சிலப்பதிகாரம் |
| | மணிமேகலை | வளையாதி |
| | குண்டலகேசி | |
| பத்துப்பாட்டு :~ | திருமுருகாற்றுப்படை | மதுரைக்காஞ்சி |
| | பெருநராற்றுப்படை | நெடுகல் வாடை |
| | சிறுபாணாற்றுப்படை | குறிஞ்சிப்பாட்டு |
| | பெரும்பாணாற்றுப்படை | பட்டினப் பாலை |
| | முல்லைப்பாட்டு | மலைபடுகடாம். |
| ஐஞ்சிறு காப்பியம் :~ | சூளாமணி | யசோதரா காவியம் |
| | உதயன குமார காவியம் | நீலகேசி |
| | நாககுமார காவியம் | |
| தமிழ் பிரபந்தங்கள்:~ | கலம்பகம் | குறிவஞ்சி |
| | உலா | தூது |
| | பரணி | பள்ளு |
| | பிள்ளை தமிழ் | நான்மணிமாலை |
| ஐவகை இலக்கணம்:~ | எழுத்து | சொல் |
| | யாப்பு | பொருள் |
| | அணி | |


ப. றொமேன்சியா
தரம் **A/L 2005 ARTS.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

# SHARP STEELS LANKA (PVT) LTD.

## Importerd, Suppliers & General Hardware Merchants



20B, Central Road,
Colombo 12,
Sri Lanka.

Tel: 074 -721834, 074-721835,
438447, 435920
Fax: 439634
E-Mail: sharpsteels@email. Com
Sri Lanka.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயே உன் மீது வழக்கு!

இயற்கை அன்னையே உன் சீற்றத்தால்
இத்தீவின் சில இடங்களை நீரைக் கொண்டு
அருந்தி விட்டாய்!
இன்னும் சில இடங்களை மண்ணைக் கொண்டு
விழுங்கி விட்டாய்!
அடுத்தது யாதாக இருக்குமென வதந்தியிடம்
கேட்டேன்
பூமித்தாயின் அரங்கேற்றமாம்!

கலியுக காலத்தில் அவதரித்தோம் என்பதற்காகவா,
கண்ணீரின் கடலில் துஞ்ச செய்கிறாய்! ~ உன்
மஞ்சமதில் தஞ்சம் கொண்டதற்காகவா,
வஞ்சத்தால் வசியம் செய்து பஞ்சமெனும் போர்வையை
உடுத்துவிற்கின்றாய்!

களிவிரக்க தாயென்று நினைத்து வந்தோம் ~ வெறும்
கற்பாறை என்று காட்டி விட்டாயே!
நீதி தேவதையே எமக்காக சற்று பரிந்து
பேசமாட்டாயா!

வழக்கும் ஆரம்பமானது.......
வலப்புறம் இயற்கை தாய்
மறுப்புறம் இன்னலின் பிடியில் அவளின் சேயாகிய நாம்!
வாதித்தோம் வாதித்தோம் ~ இறுதியில்
சாதித்தது என்னவோ தாய் தான்!

தெளிந்தது உண்மை
தெரிந்தது எம் கொடுமை!
இயற்கை அன்னையின் சீற்றம் அல்ல ~ அது
மானிடனின் மாற்றமென ......

அன்னையே இப் பிரபஞ்சத்தின்
அனைத்தையும் ஆள்பவள் நீயே ~ உன்
நிழல்தனை மையமாகக் கொண்டு வாழும் நாம் ~ உன்
நிஜம்தனை மலர்களாய் கொண்டு பூஜிக்கவில்லையாயினும் ~ எம்
நிலையற்ற மனங்களை கொண்டல்லவா தூசித்து விட்டோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

# Well Wisher

## Leo Club of Colombo City

## T. N. Rajan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்காலம் தொட்டு தற்காலம் வரை ......
பொலித்தீன், பிளாஸ்டிக் கழிவுகளால்
உன்னை அணிவித்து,
விஞ்ஞான மாற்றத்தால் எம்
மெய்ஞானத்தை மறந்து,
எயிட்ஸ், சார்ஸ் என்னும் உயிர் கொல்லி
நோய்களையும் உருவாக்கி,
ஆயுதங்களால் உன்னை காயப்படுத்தி,
இரத்தம் கொண்டு வர்ணம் தீட்டி - உன்
அழகுள்ள தோற்றத்தை அசைவப்படுத்தி விட்டோம்!

அன்புமிகு தாயே உன் வதனமதில் எத்தனைக் கோடி
வடுக்கள்
அவை அத்தனையும் எம் உள்ளத்தின் அழியா
சுவடுகள்!
மனங்களை மாற்று கொண்டோம் - எம்
மழலைகளுக்காக ......
மாற்றுவோம் உன்னை புதியதொரு
விடியலுக்காக ......

சு. ஜான்சி டயானா
**A/L 2004** வர்த்தகப் பிரிவு

## உன் தோழமை?

நீ தேர்ந்தெடுக்கும் நிறம்
உன் குணம் காட்டும் - ஆனால்
நீ தேர்ந்தெடுக்கும் நட்பு
உன்னையே காட்டும்!

உன் பணத்திற்கு உறவு
கொண்டாடுவதல்ல நட்பு
உன் குணத்திற்கு உறவு
கொண்டாடுவதே உண்மை நட்பு!

உனக்கு எத்தனை நண்பர்கள்
என்பதல்ல முக்கியம்
எத்தகைய நண்பர்கள்
என்பதே முக்கியம்!

சுகத்தில் மட்டும் பங்கு கொள்பவள்
நண்பியல்ல
சுமையிலும் தோள் கொடுப்பவளே
நண்பி!

நட்பு நிலையற்ற நீர்க்குமிழியல்ல - அது
சிரஞ்சீவியாய் என்றும் நிலை பெறும்
ஞாயிறு!
உன்னை நீ பரிசீலி
உன் நட்பும் இது போன்றதாவென்று .........

இ. மேரி சுகன்யா
**A/L 2004** வர்த்தகப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

# Kumarasamy Kalaichelvan

## G.C.E A/L Accounthing

வகுப்பு நடைபெறும் இடங்கள்

**Brilliant Institute**
Sangamitha Mawatha,
Kotahena,
Colombo - 13.

**Mod Study Centre**
No - 06 Colling Wood Place,
Colombo - 06.



With Compliments from:-

# DOT WORLD

- Internet Browsing
- Internet Calls
- Computer repairs



*In Wattala*

Dot World
245-3/1, Negombo Road,
Wattala
Tel: 947478


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பு

உழைப்பு என்பது வேலையாகும். கடினமான உழைப்பால் வாழ்வில் உயரமுடியும். உழைப்பு இரு வகைப்படும். உடல்சார்ந்த உழைப்பு, அறிவு சார்ந்த உழைப்பு எனக் கூறலாம்.

மனித உழைப்பால் இன்று உலகமே முன்னேறுகின்றது. உயிர்கள் வாழ்கின்றன. மகிழ்ச்சி கிடைக்கின்றது. குணப்பண்பு பெருகுகின்றது. அதாவது உழைப்பை தெய்வமாகக் கருதுபவர்களிடம் நேர்மை, தியாகம், பணிபு, நாணயம், சிக்கனம், அஞ்சாமை, கொல்லாமை, சான்றான்மை, வெகுளாமை போன்ற பண்புகள் உருவாகின்றன. உழைப்பினால் ஊதியம் கிடைக்கிறது. உடலும் உள்ளமும் வளர்கின்றது. சோம்பல் என்பது உழைப்புக்கு எதிரியாகும். இளமையிற் சோம்பல் முதுமையிற் துன்பம் என்பது பழமொழி. சோம்பல் சோர்வையும், தளர்வையும் தருகின்றது. ஆர்வத்தை இழக்கச் செய்கின்றது.

ஆனால் உழைப்பு ஒருவனது உடல் நடத்தையும், வாழ்வையும் வளர்க்கின்றது. சோம்பேறி தன் ஆசைகளை நிறைவேற்ற முடியாது வருத்தப்படுகின்றான். ஆனால் சுறுசுறுப்புள்ளவனோ ஆசைகளுக்கு அணை போட்டு அயராது உழைக்கின்றான். சோம்பேறிக்கு வறுமையே வருகிறது. ஆனால் உழைப்பவனுக்கு செல்வம் சேருகின்றது. எனக்குள் உழைக்கும் திறனை வளர்க்க வேண்டுமானால் சில நல்ல கருத்துக்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதேபோன்று கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் நினைத்து கலக்கம் கொள்ளக்கூடாது. இந்த காரியத்தை செய்யுமுன்னர் இதை நிறைவேற்ற முடியும் என்ற நல்லெண்ணத்தை உருவாக்க வேண்டும். முடிந்தால் இயலாதது ஒன்றுமில்லை என்பதை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

அறிவில்லாத மூடசனங்கள் சோம்பலில் காலம் கழிக்கின்றனர். அறிவாழிகள் விழிப்பாயிருத்தலையே பெரிய தனமாகப் பாதுகாப்பர்.

கி. பெனிட்டா
கலைப்பிரிவு **2004**

## பொறுமை

பொறுத்தார் பூமி ஆள்வார் பொங்கினார் காடாள்வார் என்பது பொதுமொழி பொறுமையின் மறு வடிவம் எய்தாய் ஆகும். நிலமும், கடலும், காற்றும் பொறுமையை காப்பாற்றத்தான் அதனழிவில் இருந்த உயிர்கள் காக்கப்படுகின்றது. இல்லாவிடில் "புயலில் சிக்கிய சிறு துரும்பு" போல் ஒரு நொடியில் எல்லாம் அழிந்து விடும். எனவே இவற்றிற்கும் மட்டுமன்றி மனிதராகிய நம்மிடத்திலும் பொறுமை நிலை திறத்தல் வேண்டும். எமது வாழ்வில் ஏற்படும் பல அனர்த்தங்களை பொறுமையினால் தடுத்துவிட முடியும். "எண்ணித் துணிதல் நன்று" என்பது ஔவையார் வாக்கு. எனவே எச் செயல் செய்யும் முன்னும் பொறுமையை கடைபிடித்து சிந்தித்து செயற்படல் வேண்டும். பொறுமையினால் சாதிக்க முடியாததென்று எதுவும் இல்லை. கெட்ட ஒரு மனிதர்களைக் கூட பொறுமையை கடைபிடித்து அன்பு செலுத்தின் அவர்களை ஒரு நாட்டிற்கு மட்டுமன்றி ஒரு வீட்டிற்கும் நல்ல ஒரு பிரஜையாக திருத்தி விடலாம். எனவே பொறுமை வெற்றிக்கு வழிகோலும்!

எட்வின் ராஜமோர்மேர் ஜலீன்
தரம் **9B**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

**Mr. A. Manoharan. J.P. (W.I)**

(Rtd. Health - Co-ordinating Officer -J.M.C)

*Manager.*

# *Kingsley Theater*

No. 193, Maha Vidiyalaya Mawatha,
Colombo - 13.

Office:
T.P.No: 421764

Residence:
T.P.No: 470493

With Compliments from:-

V. PRADEEP

# Ragul & Co.

324, Sea Street
Colombo - 11
T.p: 074 -715256
0777- 625323

With Compliments from:-

*Kisho, Suresh,*
*Dinesh, Queentans, Antany*

# *Boys*



Colombo -13.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைப் பெண்

இன்று சுமதியைப் பெண் பார்க்க வரப்போகின்றார்கள். வீடே அல்லோலகல்லோலப் பட்டுக் கிடக்கின்றது. இது அவளைப் பெண் பார்க்க வருவது எத்தனையாவது முறை? கணக்கு சொல்ல முடியாது.

கடந்த மூன்று நான்கு வருடங்களாக பலர் வருவதும் அவளைப் பார்ப்பதும் போவதுமாகத் தான் இருந்தார்கள். ஆனாலும் ஒரு வரனாவது சரியாக அமையவில்லை. சரியாக அமையவில்லை என்பதை விட "அந்த" விசயத்தைக் கேள்விப்பட்ட பின்பு தான் பலரும் இவளை மறுத்தார்கள். கல்யாணம் எனும் வியாபாரத்தில் சுமதி இலகுவாக விலை போகாத பொருளாக இருந்தாள். அவளுக்கு அழகும் அறிவு இரண்டும் இருந்தும் அதிஸ்டம் இல்லாதவளாக இருந்தாள். அதனால் அந்த சமூகத்தில் இருந்து கழிக்கப்பட்டே இருந்தாள். வேலைக்குப் போகிறாள் சம்பாதிக்கிறாள் என்றாலும் பெற்றோருக்கு இவள் ஒரு சுமையாகவே இருந்தாள். இவளக்குப் பின்னால் இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனரே, அவர்களையும் கரைசேர்க்க வேண்டுமே என்ற கவலை இவர்களுக்கு.

அவள் இவ்வளவு தூரம் அதிஸ்டம் கெட்டவளாகக் கருதப்படக் காரணம் என்ன? அதற்குக் காரணம் தான் என்ன?

சுமதிக்கு முதலில் இஷ்டம் இல்லாது தான் இருந்தது. ஆனாலும் பெற்றோரின் வற்புறுத்தலாலும் தங்கைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு அவள் அந்த திருமணத்திற்கு சம்மதித்தாள். திருமண ஏற்பாடுகள் யாவும் இலகுவாக அமைந்தன. காரணம் அவள் அழகு, அறிவு எல்லாவற்றிற்கும் மேலாக அவள் சம்பாதிக்கின்றாள். திருமண பத்திரிகை விநியோகித்து ஏறக்குறைய அனைத்து ஏற்பாடுகளும் முடிவடைந்துவிட்டன. திருமண நாளுக்கு மூன்று நாளுக்கு முன்னர் மாப்பிள்ளை ஒரு விபத்தில் சிக்குண்டு சுக்குநூறாகிப் போனார். இது தான் அவள் துரதிஸ்ட கட்டையாக கருதப்படக் காரணம். பின்னர் அமைந்த வரன்கள் எல்லாம் இந்த விசயத்தைக் கேள்விப்பட்டு தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஓடி ஒளிந்தார்கள்.

இன்று மீண்டும் அவளைப் பெண் பார்க்க வருகிறார்கள். சுமதியின் உள்ளத்திலோ ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள், வெறுப்புக்கள். இந்த சமுதாயத்தையே கண்டதுண்டமாக வெட்டிப் போடும் அளவுக்கு ஆத்திரம். "பெண்ணென்றால் தனித்து வாழவே முடியாதா? ஏன் அதை இந்த சமுதாயம் வேறு கண்ணோட்டத்துடனேயே நோக்குகிறது?" இப்படிப் பல கேள்விகள்.

பெற்றோரின் சம்பாஷனை அவள் காதில் விழுகிறது "இங்க பாருங்கோ. அவையளும் கேள்விப்பட்டு மறுத்திட்டாங்கள் என்றால்?" "நிச்சயம் சம்மதிப்பினம்" என்றார். அப்பா நம்பிக்கையோடு "இப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்லுறீங்க? எனக்கெண்டால் மனசில பயமாகவே இருக்கு".

"சும்மா உளறாதே! நான் எல்லா விசயமும் சொல்லித்தான் வரச்சொல்லியிருக்கிறேன்".

"அப்ப நிச்சயம் சீர் அதிகம் கேப்பினம் என்ன?"

"ஓம் 60 பவுண் நகையும் 8 இலட்சம் ரூபாவும் கேட்டிருக்கினம்"
என்னப்பா, யோசிச்சுத் தான் சொன்னியளா? இவ்வளவும் செய்ய எங்கே போறது?".
"நீ பேசாமல் இரு நான் தானே செய்யப் போறன்" – அப்பாவின் அதட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

Sujana Communication &
Internet café
Video Membership card



**No.64, hinniappuhumy mw,**
**Colombo -13.**
**T.P - 391275**

With Compliments from:-

# Renowns

***Dealers In Textiles, Wholesale & Retail***




**Five star Complex**
**No.49/8, Keyzer Street,**
**Colombo - 11.**
**T.P: 2381471**

With Compliments from:-

# CEYLON TRADING CENTRE

Importers & General Hardware Merchants



316/1,Old Moor Street,
Colombo - 12.

Telephone: 334958, 448622
Fax: 472490
E-Mail: ctccol@slt. net. lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் கேட்டுக் கொண்டு தனக்குள் சிரித்துக் கொள்கிறாள் சுமதி. மாப்பிள்ளை வீட்டார் வந்தார்கள். சுமதியைப் பார்த்தார்கள். இவளும் பூமி பார்த்த பூமகளாக அன்னம் போலே குடும்பக் குத்துவிளக்காக, சந்தையில் பொம்மையாக வந்து போனாள். மாப்பிள்ளை வீட்டார் தங்களுக்குள் ஏதேதோ பேசிக் கொண்டனர். சுமதியோ மாப்பிள்ளையின் முகத்தையும் பார்த்ததாயில்லை.

"எங்களுக்கு பெண்ணைப் பிடிச்சிருக்கு மற்ற விசயங்களைப் பற்றிப் பேசலாமா?"
"அதைப் பற்றியெல்லாம் பிரச்சினையில்லை. எல்லாம் செய்யலாம்"
"சொன்னதிலை எதுவும் குறையக் கூடாது. பிறகு பிரச்சினைப்படாதேயள் சரிதானே?"
"சரி!" இரண்டு வீட்டாரும் சம்மதத்தோடு மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருக்க இதென்ன திடீரென்று வீசிய புயலாய் சுமதி!

"உங்கட வியாபாரத்தை நிப்பாட்டுறியளா?" என்றாள் கோபாவேசத்துடன். அனைவரையும் அம்மாவையும் அப்பாவையும் அதிர்ச்சியுடன் பார்க்கிறார்கள், இவளுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதோ என்ற உணர்வுடன். "உனக்கென்ன பயித்தியமா பிடிச்சிட்டுது?" - அப்பா. "ஆமப்பா பயித்தியம் தான் பிடிச்சிட்டுது" நான் அதிஸ்டம் கெட்டவள் என்று தானே என்னை இவ்வளவு விலைக்கு விற்கிறியள். நான் அதிஸ்டம் கெட்டவளாக இருந்திருந்தால் அந்தக் கலியாணம் முடிஞ்ச பிறகெல்லாம் மாப்பிள்ளை செத்திருக்க வேணும். நான் கடைசி நிமிஷத்திலே விதவைப் பட்டத்தில் இருந்து தப்பியிருக்கிறேன். பிறகு ஏனப்பா ..... ஏன் இப்படி?"

"ஒரு பெண் பெண்மையுடன் இந்த உலகத்தில் தனித்து வாழவே முடியாதாப்பா? சொல்லுங்கோப்பா? ஏன் ஒரு பெண் என்றால் அவளை ஒரு விலைப் பொருளாகவே கருதுகிறீர்கள்? சொல்லுங்கோ அப்பா! சொல்லுங்கோ?" எனக் கதறி அழுகிறாள். "நீ இப்படி வீட்டில கிடந்தாள் உன்ர தங்கச்சியளுக்கு எப்பிடி கலியாணம் பண்றது? விசர்க் கதை கதையாதே"

"அப்பா நிச்சயம் என்ர தங்கச்சியளின்ர வாழ்க்கைக்கு முட்டுக்கட்டையாக இருக்க மாட்டேன். எனக்கு சொந்தமா வேலை இருக்கு. நான் உழைக்கிறேன். என்னைப் பார்த்துக் கொள்ள எனக்கு தெரியுமப்பா. எனக்க கலியாணம் தேவையில்லை. இப்படி ஒரு ஆணிட்ட அடிமைப்பட்டுக் கிடக்கவும் விருப்பமில்லை. ஒரு வேளை நிண்டு போன அந்தக் கலியாணம் நடந்திருந்தால் நான் அடிமையாக இருந்திருக்கலாம். கடவுள் தான் எனக்கு சுதந்திரம் கொடுத்திட்டாரே. நான் இனி சுதந்திரப் பறவையப்பா. அதற்காக எல்லை மாறவும் மாட்டேன். அதே வேளை உங்களுக்குப் பாரமாகவும் இருக்க மாட்டேன். என்ற சுமதி தன் உடமைகளையும் எடுத்துக் கொண்டு அனைவரும் வாய் திறந்து அதிர்ச்சியடன் பார்த்திருக்கப் புறப்பட்டாள் புதுவாழ்வு தேடி! பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக!!

வே. சுபாஷினி
தரம் **12 A/L 2005 (Arts)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

## Dias Enterprises

No. 100/5 Weliyamuna Road.
Hendala, Wattala.
Tel: 2947749

With Compliments from:-

## ANUSHA
GOLD HOUSE

அனுஷா

39



Wattala Shopping Complex
Nendala Junction,
Negombo Road,
Wattala.

With Compliments from:-

NGJ

*New*
## Gowry Jewellers

நியூ கௌரி

33



Wattala Shopping Complex
Negombo Road, Wattala.
Tel : 935214

With Compliments from:-

S.MAHENDRAN
MARKETING REPRESENTATIVE

## GAYANI ENTERPRISES (PVT) LTD
No.540/2, 10th Mile Post Road, Werahara,
Boralesgamuwa.



**Tel: 074-300802-3-7**
**Fax: 074 -200527**
**E-mail: pop@wow.lk**
**Mobile: 0777-671895**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

1. ஐரோப்பியாவில் உள்ள மிக நீண்ட நதி ~ வல்கா 2325 மைல்
2. உலகத்தில் அதிகமாக பஞ்சு விளையும் நாடு ~ அமெரிக்கா
3. 1910ம் ஆண்ட தோன்றிய வால்வெள்ளியின் பெயர் ~ ஹரிஸ் வால் வெள்ளி
4. முதன் முதலில் முத்திரையை வெளியிட்ட நாடு ~ ஐரோப்பா
5. வருடத்தை 365 நாட்களாக பிரித்தவர்கள் ~ எகிப்தியர்கள்.
6. முதன் முதலில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாடு ~ இந்தியா
7. சார்க் விளையாட்டு அதிகமாக நடைபெற்றுள்ள நாடு ~ இந்தியா
8. தொழிலாளர் தினம் உதயமான ஆண்ட ~ 1886
9. இலங்கையில் இலவசமான கல்வி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு ~ 1945
10. முதன் முதலாக விண்வெளியில் பூமியில் வலம் வந்த பெண் ~ வொன்ரீனா திரஸ்கோவா
11. மூன்று தலை நகரங்களைக் கொண்ட நாடு ~ தென்னாபிரிக்கா
12. அமெரிக்க நாட்டை கண்ட பிடித்தவர் ~ கொலம்பஸ்
13. முதன்முதலாக உலக வரைபடம் வரைந்தவர் ~ தொலமி
14. சீனாவின் துன்பம் என்று அழைக்கப்படும் நதி ~ குவாங்கோ
15. நெல்லிக்காயில் அதிகளவு உள்ள சத்து விட்டமின் **C**
16. மரத்தினைக் கொண்ட சைக்கிள் முதன் முதலாக தயாரிக்கப்பட்ட ஆண்ட ~ 1818ம் ஆண்டு
17. குருதியை நான்கு பிரிவுகளாக வகுத்தவர் ~ லான்ஸ் ரைனர்
18. மலேரியாவைப் பரப்பும் நுளம்பின் பெயர் ~ அனோபில்
19. ஆசியாவையும், ஆபிரிக்காவையும் பிரிக்கும் கடல் ~ ஜப்பான் கடல்

ரி. துஷ்யந்தினி
தரம் 9A

## படிப்பதற்கு உதவும் சொற்கள்

விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது? தீர்ப்பு
வழக்கைத் தாக்கல் செய்பவர்? வாதி
வழக்கில் குற்றஞ்சாட்டப்படுபவர்? பிரதிவாதி
தானும் உண்ணமாட்டான் பிறருக்கும் கொடுக்க மாட்டான்? உலோபி
கடவுள் இருக்கின்றார் என்று நம்புபவன் ~ ஆத்திகன்
கடவுள் இல்லை என்று வாதிடுபவன் ~ நாத்திகன்
தேர்தலில் போட்டி இடுபவர் ~ வேட்பாளர்
மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன் ~ சுயநலவாதி
அனைத்து உடமைகளையும் இழந்தவன் ~ அகதி
வீண் செலவு செய்பவன் ~ ஊதாரி
சுதந்திரமற்று வாழ்பவன் ~ அடிமை
நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை ~ அணிந்துரை

கே. அபிராமி
தரம் 7A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

NEW LALITHAA JEWELLRES

நியூ லலிதா



No: 40/6,
New Shopping Complex,
Negombo Road,
Wattala,

With Compliments from:-

R. Ravindran

SKY BIRD (CEYLON) COMPANY

General Trading Importers & Distributors



No: 124, Weliyamuna Rd,
Hekitta, Hattala, Sri Lanka.
Tel: 94 -1- 2941387
Fax:94 -1 2941387

With Compliments from:-


Well Wisher



Jegam

With Compliments from:-

Well Wisher



M. Anushka
A/L 2004
Commerce.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மதம் ……… இந்து மதம்

சிலுவைக்கு முன்னதாக
சிந்து நதிக்கரையினிலே
தோன்றியதம்மா இந்து மதம்

உயர்ந்த குரவர்கள் தோன்றி
உயரிய அற்புதங்கள் செய்து
உலகத்தை வியக்க வைத்ததம்மா இந்து மதம்

வேதங்கள் தந்து
ஆகமங்களை வித்திட்டு
ஆன்மீக கருத்துக்களை தந்ததம்மா இந்து மதம்

உபநிட தங்களைத் தந்து
உண்மையை உணர்த்தி
உற்றாரை உய்யச் செய்ததம்மா இந்து மதம்

சித்தர்கள் பலர் தோன்றி
சிந்தனையில் சிறகடித்து
சிவனை உலகிற்கு அறிவித்ததம்மா இந்து மதம்

ஞானிகள் யோகிகள் பலதோன்றி
ஞான பலத்தைப் பெருக்கி
ஞான உபதேசம் செய்ததம்மா இந்து மதம்

மெய்யடியார்கள் பிறந்து
மெய்யன்பு செலுத்தி
மெய்யுணர்வு பெற்றதம்மா இந்து மதம்

கலைவளமும் புலவளமும்
கடவுளின் சக்திகள்
கல்லாதோர் முன் வெளிப்படுத்தியதம்மா இந்து மதம்

காத்திருந்த என் கண்களுக்கு
பூஜிக்க கிடைத்ததம்மா
இந்துப் புனித இந்து மதம்

க. தேன்மொழி
தரம் 12 வர்த்தக பிரிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

# MADHU PRINTERS

Offset, Letter Press, Wedding Cards, Embossing & Foiling
Two Colour rubber stamp company Identity Cards


**V.ILLANGOVAN**
(Managing partner)

Office:
39/3A Carmel Mawatha, palliyawatta.
Hendala Wattala.
Tel: 945844, 0777 246838



With Compliments from:-

# MRS. RAJESWARY FAMILY & THIYAGARANI





101/A Weliyameena Road
Heleitta
Wattala.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தம்

யுத்தம் யுத்தம் யுத்தம் என்னும்
சத்தம் எங்கும் கேட்குதே
சித்தம் கலங்கி பித்தம் ஏறி
நித்தம் வருந்த வேண்டுமே

என்ன செய்வோம் ஏது செய்வோம்
என்ன வழி தேடிச் செல்வோம்
சின்ன சின்ன பாதுகாப்பு
முன்னதாக நாடிச் செல்வோம்

உயிர்கள் சேதம் பயிர்கள் சேதம்
இடர்கள் நேரும் உடலிகள் மாழும்
சுடர்கள் மாறி சுடுகாடாகும்
அடவியாக மாறும் காலம் வந்ததோ

யுத்தம் வந்த போது மக்கள்
நித்தம் வெறி கொண்டு அலைந்ததை
சித்தம் என்று எண்ணியே
சத்தம் இன்றி நினைப்பதோ

அழிவுப் பாதை வாய் திறந்து
இழிவு பண்ணும் யுத்தமதை
கழிவு நீரைப் போக்குவது போல்
ஒழித்து விட மாட்டாரோ

கட்டடங்கள் இடிந்து விழ
மாட்டினங்கள் மடிந்து விட
பூட்டினங்கள் கழன்று விழ
ஏட்டினங்கள் அழிந்திடுமே

யுத்தம் வேண்டாம் சத்தம் வேண்டாம்
நித்தம் பலிகள் காண வேண்டாம்
யுத்தம் புதிய வாழ்வு வேண்டும்
இரத்தம் காணா வாழ வேண்டும்

**S.** வினோதினி
**12** வர்த்தகப் பிரிவு **2005**

## மூன்றெழுத்து கவிதை

அன்னை எனும்
மூன்றெழுத்தால் பிறந்தோம்
அன்பு எனும்
மூன்றெழுத்தால் வளர்ந்தோம்
பள்ளி எனும்
மூன்றெழுத்தில் சேர்ந்தோம்
கல்வி எனும்
மூன்றெழுத்தில் கற்றோம்

நட்பு எனும்
மூன்றெழுத்தினை உணர்ந்தோம்
போட்டி எனும்
மூன்றெழுத்தினை எதிர்கொண்டு
வெற்றி எனும்
மூன்றெழுத்தை அடைந்து
சாதனை எனும்
மூன்றெழுத்தை சந்திப்போம்.


**C. Pio Sinthiya**
**Grade 7C**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

J.F.FREIGHTERS

Clearing, Forwarding & Transportation Agencies



No. 137, Newnham Square,
Kotahena,
Colombo -13.
Mobile: 077 - 903987

With Compliments from:-

WESCO
MEDICAO

Dealers in Pharmaceutical & Groceries.

WESCO

No. 216, ALUTHMAWATHE ROAD,
COLOMBO - 15.
Tel: 01-2520985

With Compliments from:-

L.Navindha Raja




With Compliments from:-

Well Wisher

Anton Sevior

Mishale Mirando





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருகி விழுந்த சமாதானம்

காலம் கடந்திருக்க
கண்கள் காத்திருக்க
கற்றவன் விழித்திருக்க
கருகி விழுந்த சமாதானம்

ஒற்றுமை சீர்குலைய
வேற்றுமை மேலோங்க
நம்பிக்கை துருப்பிடிக்க
கருகி விழுந்த சமாதானம்

ஜாதியின் வெறியாக
தாய் மண் தீ பிடிக்க
உயிர்கள் சாம்பலாக
கருகி விழுந்த சமாதானம்

தீயவன் வழியாக
நல்லவன் பலியாக
தீமை மொழியாக
கருகி விழுந்த சமாதானம்

மக்கள் மனம் தீயாக
ஜாதி மதம் வேறாக
மண்ணாசை உண்டாக
கருகி விழுந்த சமாதானம்

தலைமைத்துவம் சீர்குலைய
தரமற்றவன் ஊடுருவ
தள்ளாடிய மனங்களாக
கருகி விழுந்த சமாதானம்

வேதங்கள் சதியாக
வேற்றுமை யுத்தமாக
வெண்மை கருமையாக
கருகி விழுந்த சமாதானம்

படைத்தவன் பற்றுக் குறைய
பணவாசை தலைதூக்க
கள்வர் உருவாக
கருகி விழுந்த சமாதானம்

அமைதி எதிர் சொல்லாக
அன்புக்கு மறுப்பாக
பண்புக்கு வேற்றுமையாக
கருகி விழுந்த சமாதானம்

தெய்வ நம்பிக்கை குறைய
தலைவர்கள் அதிகரிக்க
கடமை உணர்வைத் தவிர்க்க
கருகி விழுந்த சமாதானம்

சமாதானக் கொடி தீப்பிடிக்க
வெண்புறா கறுப்பாக
மதகுருக்கள் மாயக்காரராக
கருகி விழுந்த சமாதானம்

பூவுக்குள் பூகம்பம் எழ
முத்துக்குள் வெடி குண்டிருக்க
மனதுக்குள் பயமிருக்க
கருகி விழுந்த சமாதானம்

செ. ஜேர்மைன்
**A/L 2005** வர்த்தகம்

### மலர்கள் ஆயிரம்

வாசனை வீசும் மலர்கள் ஆயிரம்
ஆயிரம் இதழ் கொண்ட மலர்கள் ஆயிரம்
மணம் கொண்ட மலர்கள் இடையில்
மன ஆறுதல் பெற சுகங்கள் ஆயிரம்!

### அன்பு செய்

நாட்டை அன்பு செய் நல்ல பிரஜையாவாய்!
பெற்றோரை அன்பு செய் பாசத்தை அறிவாய்!
குருவை அன்பு செய் நல்ல அறிவைப் பெறுவாய்!
நண்பனை அன்ப செய் நல்ல நட்பை அறிவாய்!
இசையை அன்பு செய் கவிஞனாவாய்!
உயிர்களை அன்பு செய் சொர்க்கத்தை அடைவாய்!

ச. மேரி சிந்தியா
தரம் 8A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

**NIHAL GALAPATHI**

**(C.C.S.M)**



**Colombo Central Super Market Complex**

With Compliments from:-

**W.D.MICHEAL**

**(C.C.S.M)**




**Colombo Central Super Market Complex**

With Compliments from:-

**AGRO LANKA**

**(C.C.S.M)**



**Colombo Central Super Market Complex**

With Compliments from:-

**LEION**

**(C.C.S.M)**



**Colombo Central Super Market Complex**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏந்தி நிற்கும் கரம்

வறுமை கையேந்திவிட்டது
தோளில் பிள்ளையை ஏந்தி
நாளைய தலைமுறை நடுரோட்டில்
நாடோ தன்பாட்டில்
பள்ளி புத்தகத்தை சுமக்காமல்
பாவி என்னை சுமக்கும்
என் பாசமிகு அண்ணே
உன் பாசத்திற்கு ஈடாக
இந்த பாரினில் ஏதுமுண்டோ?
பூவாய் பூவுலகில் மலர்ந்தவனே
புன்னகை கலந்த உன் முகமும்
ஏங்கி நிற்கும் கரமும்
எதை யாசிக்கின்றன
வாழ்வுப் பிச்சையா?
வயிற்றுப் பிச்சையா?
பிறப் பெடுக்கும் போதே
பெற்றோரை இழந்து விட்டேன் நான்
இருப்பதை எல்லாம் சுரண்டி
இல்லாமல் போய்விட்ட சொந்தங்கள்
புத்தகப் பை ஏந்தும் என் கைகள்
இன்று பிச்சைப் பாத்திரம்
ஏந்தி நிற்கின்றேன்
வேரறுந்த நாற்றாக கலங்கிய முகத்தோடு
நீ கரம் நீட்டி கேட்டது
கலைந்து போன உறவுகளையா?
இல்லை உடலிற்கு உரமிட்ட
உணவுப் பண்டங்களினையோ?
பாவப்பட்ட பாலகனுக்கு
பதில் சொல்ல யாரும் இல்லையா?
உன் வாழ்க்கை புரியும்
திரும்பிப் பார்

ஜி. சிரோமி
தரம் 7A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


With Compliments from:-




# Lion M. Kesawarajah MJFJP

With Compliments from:-

# LEO CLUB OF NEGOMBO ORIENT






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டு

வாழப் பிறந்தவர் மக்கள் - அவர்
வாழும் வழிமுறை கண்டு
நாளும் உழைத்திடல் வேண்டும் - அது
நன்மை தரும் நலத் தொண்டு

நாளும் உழைத்திடும் மனிதர் - தினம்
நலிந்து மடிவதைக் கண்டு
பாழும் துயரினை வென்று - உயர்
பணி செய்வதே நலத் தொண்டு

சாதி மதப்பெரும் பூ சலால் - தினம்
சஞ்சலப்படும் மக்களை
மோதி வருகின்ற தீமையை - இங்கு
முற்றால் ஒழித்திடல் தொண்டு

இரந்து வாழும் இழிமையை - பணம்
சுரண்டி வாழும் கொடுமையை
விரைந்து நீக்கும் வழியினை - கால
தொடர்ந்து செய்தல் நற் தொண்டு

பற்றி வந்த பழைமையால் - தினம்
கெட்டு நொந்து உழல்பவர்
வெற்றி கிட்டும் புதுமையில் - இங்கு
வேண்டி நிற்றல் நற்தொண்டு

என்னை ஈன்ற ஈழத்தினை - நன்கு
என்னை வளர்த்த தமிழினை
முன்னை சிறக்க முயன்றிட(ல்) - உலகில்
மேன்மை தரும் நலத் தொண்டு

ஐ. பிளோமினா
தரம் 11B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments from:-

# Nithyakalyani Jewellers

**Makers of Genuine 22Gt Gold Jewelleries**





*No. 40, Sea Street,*
*Colombo - 11.*
*Tel: 2421617, 2329847*
*Website: nithyakalyani. com*




With Compliments from:-

# KANNA CD WORLD

SPECIALISE IN SALES OF ORIGINAL
Audio CDs & Video Cds
*(Tamil, English, Hindi & Sinhala)*

- ***Computer Accessories***
- ***VHS to VCD Transferring***
- ***All types of CD copying***
- ***VCD & VHS for rental***



**331 1/1, Sea Street, Colombo 11.**
**Tel: 2543202-03, Fax: 2543203**
**Hotline: 077-887916**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழி எம் தாய் மொழி

பண்டை மக்கள் போற்றும் தமிழ் மொழி
சாலை எங்கும் புகழும் தமிழ் மொழி
காலை துயிலில் ஒலிக்கும் தமிழ் மொழி
எண்ணிய சொல்லை சொல்லும் தமிழ் மொழி
பண்ணிய பாவம் மறைக்கும் தமிழ் மொழி

புலவர் கையில் தவழும் தமிழ் மொழி
வானவர் துதிக்கும் வையகத் தமிழ் மொழி
பாமரர் பாட்டில் பங்கிடும் தமிழ் மொழி
கலைஞர் கவியில் சொரியும் தமிழ் மொழி
கம்பர் எழுதிய கவிதைத் தமிழ் மொழி

மறைகள் பலவும் ஓதிடும் தமிழ் மொழி
சிலைகள் கூறும் சிற்பிய தமிழ் மொழி
படைகள் சூழ்ந்து பயின்றிடும் தமிழ் மொழி
தலைகள் உயர்ந்திடும் தங்கத் தமிழ் மொழி
தடைகள் தன்னில் தவிர்க்கும் தமிழ் மொழி

சாதிக் கொடுமையை தவிர்க்கும் தமிழ் மொழி
ஞான வழியைக் கொடுக்கும் தமிழ் மொழி
தாயின் விம்பம் தந்திடும் தமிழ் மொழி
பாசக் கயிற்றை கட்டிடும் தமிழ் மொழி
தாய் மொழியே எம் தமிழ் மொழி!

ப. ஹரிபிரசன்யா
தரம் 9B

## நான் இறந்த பிறகு

நான்
இறந்த பிறகு ......
எனது கண்களைப்
பார்வையற்ற ரசிகனிடம்
பரிசளிக்கவும்
சித்திரங்கள் சிர்திருத்தம் பெறும்!

எனது கைகளை
கையற்ற கலைஞனிடம்
கையளிக்கவும்
சிற்பங்கள் சிறப்புறும்!

எனது கால்களை
ஊனமுற்ற
உழைப்பாளியிடம்
தானம் பண்ணவும்
இதயத்தை மட்டும்
என்னுடனே புதையவிடுங்கள் ........
இது எனக்கு சொந்தமானதல்ல!

ரி. வருண்ஷி – தரம் 9B

## மலர்கள்

வாசமுள்ள மலர்களே
வண்டு வந்து மொய்க்கவே
வீசுகின்ற காற்றிலே
அசைந்து ஆடும் மலர்களே

சூரியனைக் கண்டு மலருங்கள்
நறுமணம் வீசி அசையுங்கள்
பெண்கள் வந்து பறிக்கவே
மகிழ்ந்து விரியும் மலர்களே

மாலையில் மலரும் மலர்களே
நிலவின் ஒளியில் ஒளிருங்கள்
விடியும் வரையும் அமைதியாகி
விடிந்ததும் இறைவன் மடியில் மலருங்கள்

எஸ். பிரியதர்சினி
தரம் 9C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


With Compliments from:-


# CHANDRAS COMMUNICATION

**Stationaries & Groceries**

Net Phone, IDD & Local Calls, Fax, Photo Copy, Book Binding, Laminating, Stationary & School Books

**"Overseas Connecting Call Facilities"**





**Van for Hire**
**24 Hours**
**Contact No: 2507619**
**Mobile: 0777-276817**

**No. 405, Galle Road, Wellawatta, Colombo - 06.**
**Tel: 01-2552686, 2552687, 2551138**
**Fax: 0094-1-2507619**
**e-mail: sintha@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத் துளிகள்

## அன்பு

அஸ்தமிக்கும் சூரியன் அந்திவானை
அழகுபடுத்தும் போது
அலட்டிக் கொள்வதில்லை!
மொட்ட விழாம் மலர்கள் வசந்தத்தை
வரவேற்கும் போது தென்றல்
விபத்துக் குள்ளாவதில்லை!
உண்மை அன்பு என்றும்
இதய ஆடுகளத்தில்
ஆட்டமிழப்பதில்லை!

ஆர். எம். கிருசாந்தி
தரம் 7B

## சிந்திப்போம்

சிந்திக்கும் போது
நாம் இயல்பின்படி
சிந்திக்கின்றோம்!
பேசும் போது விதிகளை
அனுசரித்து
பேசுகின்றோம்!
செயல்படும் போது
ஊரோடு ஒத்துச்
செயல்படுகின்றோம்!

ஏ. பிரியதர்ஷனி
தரம் 5C

## வானவில்

வான அலங்காரமாக வருவானே இந்த வானவில்
மழை காலத்தில் முகிலின் மத்தியில் வருவான்
சூரியன் ஒரு வண்ணம் என்றால் - இவன்
பல வண்ணம் தாங்கி வானில் உதிப்பான்

கத்தரி கொண்ட ஊதாவை - தன்
மேனியில் பூசி வருவான்
பச்சை தாவரங்கள் கொண்ட பச்சையை
தன் காலடியில் பூசி வருவான்

